# நிலவைத் தெரிந்து கொள்வோம்!



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# நிலா நிலா ஓடி வா ! என்று நாம் பாட்டுப் பாடிய நிலாவினைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?







சூரியக்குடும்பத்தில் (Solar System) இருநூறுக்கும் மேற்பட்ட நிலாக்கள் உள்ளன.



www.worldtamilacademy.com



பூமிக்கு இருப்பது ஒரே ஒரு நிலா. அதுவே பூமியின்  துணைக்கோள் ஆகும்.




நிலா தன்னைத் தானே சுற்றிக்கொண்டு

பூமியோடு சூரியனையும் சுற்றுகிறது.



www.worldtamilacademy.com




சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று பிரதிபலிக்கிறது (Reflection). அதனால் நிலா வெளிச்சம் தருகிறது.



நிலா தன்னைத் தானேச் சுற்றுவதற்கும் பூமியைச் சுற்றுவதற்கும் 27.3 நாட்களை எடுத்துக்கொள்கிறது. அதனால் நிலவின் மறுபக்கத்தை நம்மால் பார்க்க முடியவில்லை.



www.worldtamilacademy.com





நிலவில் ஈர்ப்புவிசை மிக மிகக் குறைவு. அதனால் பூமியில் 42 கிலோ எடை உள்ள மனிதரின் எடை நிலவில் 7 கிலோவாக இருக்கும்.



www.worldtamilacademy.com



**1969 ஆம் ஆண்டு, நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் முதன்முதலில் இறங்கினார்.**



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com